## தருமபுரி முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் - திரு. து. கணேஷ்மூர்த்தி, எம்,ஏ., பி.எட்.,

ந.க.எண். 370 / அ1 / 2022 நாள் 23 . 02. 2022

---

பொருள் பள்ளிக் கல்வி - பொதுப்பணிகள் - கருணை அடிப்படை நியமனம் - பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு. ரா. பாலச்சந்திரன் என்பவரின் வாரிசுதாரர் (மனைவி) **திருமதி.வெ.நாகலட்சுமி இளநிலை உதவியாளர்** என்பவரின் **பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல்** - தொடர்பாக

பார்வை 1 தருமபுரி மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 1888/அ1/2015 நாள் 08.08.2016

2 அரசாணை(நிலை) எண் 101 பள்ளிக் கல்வித் துறை நாள் 18.05.2018

3 அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள். 26.02.2021

4 தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 21925/ஜே/ஜே4/இ4/2021 நாள். 09.04.2021

5 பாலக்கோடு மாவட்டக் கல்வி அலுவலரின் ந.க.எண் 4423/அ1/2019 நாள் 11. 01. 2022

ஆணை

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு கல்வி மாவட்டம், பெரியாம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து பணிக்காலத்தில் 28.08.2009 அன்று காலமான திரு.ரா.பாலசந்திரன் என்பவரின் வாரிசுதாரரும் மனைவியுமான **திருமதி.வெ.நாகலட்சுமி** என்பவருக்கு பார்வை (1)இல் காணும் தருமபுரி மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் **09.08.2016 முற்பகல் இளநிலை உதவியாளராக** தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு தருமபுரி மாவட்டம் பாலக்கோடு அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பணிபுரிந்து மாறுதல் மூலம் தற்போது தருமபுரி மாவட்டம் சோமனஅள்ளி அரசு உயர்நிலைப்பள்ளியில் பணிபுரிந்து வரும் அன்னாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யக்கோரிய கருத்துருக்கள் பார்வை 5 -இல் கண்ட பாலக்கோடு மாவட்டக் கல்வி அலுவலரின் கடிதத்தின் வாயிலாக பரிந்துரை செய்து பெறப்பட்டுள்ளது.

பார்வை 3-இல் காணும் அரசாணை பத்தி (5-1) மற்றும் (5-2) இல் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5-1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படும்.

... 2 ...

(5-2) மேலே பத்தி (5-1) இல் உள்ள அரணையினை செயல்படுத்த, சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் ( One Level higher than the appointing authority), அவரவர் கட்டுபாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறைசெய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை 4ல் காண் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் பத்தி 3-இல் அரசாணை எண் 101 பள்ளிக் கல்வித் துறை நாள் 18.05.2018 இல் இளநிலை உதவியாளர் / தட்டச்சர் பதவிகளுக்கு நியமன அலுவலர் முதன்மைக் கல்வி அலுவலர் என்பதால் பார்வை 2 இல் காண் அரசாணை வெளியிடுவதற்கு முன்னர் மாவட்டக் கல்வி அலுவலரால் கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளவர்களின் பணியினை பார்வை 3இல் காண் அரசாணையில் தெரிவித்துள்ளவாறு நியமன அலுவலர் ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலரான முதன்மைக் கல்வி அலுவலரால் பணிவரன்முறை செய்திட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மேற்படி இளநிலை உதவியாளருக்கு பார்வை 1 இன்படி தருமபுரி மாவட்டக் கல்வி அலுவலரால் நியமன ஆணை வழங்கப்பட்டு 09.08.2016 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.**

மேற்காண் தனியருக்கு எவ்வித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் பார்வை 3-இல் காணும் அரசாணையின்படியும், பார்வை 4-இல் காண்தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரது செயல்முறைகளின்படியும், பார்வை 5-இல் காணும் நியமன அலுவலரான பாலக்கோடு மாவட்டக் கல்வி அலுவலரின் பரிந்துரையின் பேரிலும், பார்வை 1-இன்படி கருணை அடிப்படையின் கீழ் நியமனம் செய்யப்பட்ட சோமனஅள்ளி அரசு உயர்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் **திருமதி.வெ.நாகலட்சுமி என்பாருக்கு 09.08.2016 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியில் வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.**

மேற்படி திருமதி.வெ.நாகலட்சுமி என்பாருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் ஈராண்டு காலம் தகுதிகாண் பருவ காலமாக நிர்ணயம் செய்து ஆணை வழங்கப்படுகிறது. தகுதிகாண் பருவகாலத்தில் மேற்படி தனியர் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வுகளை பவானி சாகர் அடிப்படை பயிற்சிகள் தேர்ச்சி பெறவேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்

தருமபுரி

23.02.2022

பெறுநர் தலைமையாசிரியர் அரசு உயர்நிலைப்பள்ளி சோமனஅள்ளி
தருமபுரி மாவட்டம் (பெறப்பட்ட அனைத்து அசல் கருத்துருக்களுடன்)

நகல் 1. மாவட்டக் கல்வி அலுவலர் பாலக்கோடு

2. திருமதி.வெ.நாகலட்சுமி இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப்பள்ளி சோமனஅள்ளி, தருமபுரி மாவட்டம் (தலைமையாசிரியர் மூலமாக)